ஆனால் இவை மூன்றும் ஒரு பள்ளிக்குத் தரப்படுவதில்லை. ஆகாய விமானப் படைப் பிரிவை ஒரு பள்ளிக்குக் கொடுத்தால் அடுத்த பிரிவை அந்தப் பள்ளிக்குத் தருவதில்லை. கூடுமான வரையில் இந்த மூன்று பிரிவுகளையும் ஒவ்வொரு பள்ளிக்கூடத்திற்கும் வழங்க வேண்டும் என்று நான் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன். நம்முடைய கல்வியிலே ஜாதி மதப் பிரச்சாரங்கள் அதிகமாக தலை தூக்காத அளவிற்குப் பார்த்துக் கொள்ள வேண்டும். காரணம், நம்முடைய அடிப்படைத் தத்துவம் ஜாதி மத பேதமற்ற சமுதாயம் என்பது தான்.

Mr. K. T. K. THANGAMANI: Sir, now it is 1-30 p.m.

Mr. DEPUTY SPEAKER: I hope the House will give permission to sit for 5 more minutes.

திரு. கு. காமாட்சி: இன்றைக்கு சரித்திர பாடத்தில் ஒரு பகுதி வருகிறது. கஜினி முகமது சோமநாதபுர ஆலயத்தின் மீது 17 முறை படையெடுத்தான், கொள்ளையடிப்பதற்கு என்று இருக்கிறது. இதைப் பார்க்கிறபோது இந்த நாட்டிலே இருக்கிற இந்துக் களுக்கும் இஸ்லாமியர்களுக்கும் இருக்கிற ஒரு தொடர்பு அறுபட்டு போகக் கூடாது என்பதற்காகத்தான் இந்தமாதிரியான ஜாதி உணர்ச்சியை, மத உணர்ச்சியை உண்டு பண்ணுகிற வார்த்தைகள் தடைப்படுத்தப்பட வேண்டும் என்று நான் இந்த நேரத்தில் இங்கே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதேநேரத்தில் மேலைநாடுகளிலேயெல்லாம் பள்ளிகளுடைய நேரம் காலையிலே இருந்து மதியத்திலே முடித்துவிடுகிறார்கள். அந்த முறையை நாம் ஏன் அனுசரிக்கக் கூடாதென்று நமது அரசு பரிசிலிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். 10 மணிக்கு வந்து அங்கேயே இருந்து 4 மணி 5 மணிக்கு வீடு செல்லு கின்ற மாணவர்கள் அவர்களால் எதுவும் செய்ய முடியாத நிலையிலே களைப்படைந்திருக்கிறார்கள். ஆகவே காலையிலே 8 மணிக்குத் துவங்கி எல்லாப் பள்ளிக்கூடங்களும் 1 மணி அளவிலே முடிந்து விட்டால் அந்த ஒரு உணர்ச்சி மாணவர்களுக்கு நல்ல சுறுசுறுப்பாக இருக்குமென்று நான் இந்த நேரத்திலே சொல்லிக் கொண்டு எனக்கு அளிக்கப்பட்ட நேரத்திற்கு நான் நன்றி கூறி விடை பெறுகிறேன், வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவடைகின்றன. பேரவை மீண்டும் நாளைக் காலை 9 மணிக்குக் கூடும்.

பின்னர், பேரவை ஒற்றிவைக்கப்பட்டது.

(7) பேரவையின்முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

A. *Statutory Rules and Orders*

' Nil '

B. *Reports, Notifications and Other Papers*

110. Report of the Tamil Nadu Police Commission, 1971. (Volumes I to III English) (Volume I—Tamil).